## பெப்ரவரி– 28 – புதன்
### புனித கொர்த்தோனா மார்கரீத்
### “உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது” (மத்.20:26)

**முதல் வாசகம் : எரேமியா18 : 18– 20**

யூத நாட்டினரும் ஜெருசலேம் வாழ் மக்களும் ”வாருங்கள், எரேமியாவுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வோம். குருக்களிடமிருந்து சட்டமும், ஞானிகளிடமிருந்து அறிவுரையும், இறைவாக்கினரிடமிருந்து இறைவாக்கும் எடுபடாது. எனவே அவர்மீது குற்றம் சாட்டுவோம். அவர் சொல்வதைக் கேட்கவேண்டாம்” என்றனர். ஆண்டவரே, என்னைக் கவனியும் என் எதிரிகள் சொல்வதைக் கேளும். நன்மைக்குக் கைம்மாறு தீமையா? என் உயிரைப் போக்கக் குழிபறித்திருக்கின்றார்கள் அவர்கள்மேல் உமக்கிருந்த சினத்தைப் போக்குவதற்காக அவர்களைக் குறித்து நல்லதை எடுத்துச் சொல்வதற்கு நான் உம்முன் வந்து நின்றதை நினைவுகூரும்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் பேரன்பால் என்னை விடுவித்தருளும்

**நற்செய்தி : மத்தேயு20 : 17 - 28**

அக்காலத்தில் இயேசு எருசலேமை நோக்கிச் செல்லும் வழியில் பன்னிரு சீடரையும் தனியே அழைத்துக் கூறியதாவது: ”இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள்.அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்” என்று அவர்களிடம் கூறினார்.பின்பு செபதேயுவின் மனைவி தம் மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார்.”உமக்கு என்ன வேண்டும்?” என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், ”நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்” என்று வேண்டினார்.அதற்கு இயேசு, ”நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?” என்று கேட்டார். அவர்கள் ”எங்களால் இயலும்” என்றார்கள்.அவர் அவர்களை நோக்கி, ”ஆம், என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல மாறாக அவ்விடங்களை என் தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்” என்றார்.இதைக் கேட்டுக் கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபங் கொண்டனர்.இயேசு அவர்களை வரவழைத்து, ”பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள் இதை நீங்கள் அறிவீர்கள்.உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார்.

**தியானம் :** உலகோடு இணைந்து வாழ்வது யாவருக்கும் எளிமையான காரியம். ஊரோடு ஒத்து வாழ்வது எளிது ஆனால் நம்மை படைத்து உருவாக்கி அன்பு செய்துவாழும் கடவுளுக்காக வாழ்வது என்பது மிகவும் கடினம். ஏனெனில் கடவுளுக்காக வாழ வேண்டும் என்று முடிவெடுத்தால் உலகத்தின் அவமானங்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும். உலகத்தின் மாய கவர்ச்சிகளுக்கும், ஆடம்பரங்களுக்கும், பலியாகிப்போன மனிதர்களிடமிருந்து நம்மைப் பிரித்தெடுத்து அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு மாறாக வாழ கடவுள் நம்மை இந்த உலகத்திலிருந்து தனியாக பிரித்தெடுத்து தனக்கென, தன்னுடைய அன்பு விழுமியங்களுக்காக வாழ நம்மைத் தூண்டும் போது அதைப்பார்த்து இந்த உலகம் நகைக்கும், ஏளனம் செய்யும், வெறுக்கும், விமர்சனம் செய்யும். (யோவா.15:19,16:20,33) எனவேதான் ஆண்டவர் இயேசு தன் சீடர்களைப் பார்த்துச் சொன்னார், “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (லூக்.9:23) “தம் சிலுவையை சுமக்காமல் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது” (லூக்.14:27). இயேசுவை நாம் பின்பற்ற முடிவெடுத்தோமென்றால் நாம் இழப்புக்களை, சிலுவைகளை சுமக்க தயாராக இருக்க வேண்டும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்லொளிய அது அப்படியேதான் இருக்கும் மடிந்தால்தான் மிகுந்த பலன்தரும் அதுபோல நம்முடைய அகந்தைக்கு, ஆணவத்திற்கு, தற்பெருமைக்கு, புகழுக்கு இறக்கும்போதுதான் நம்மால் பணிவு, கனிவு, இரக்கம், அன்பு, மன்னிப்பு போன்ற தூய ஆவியின் கனிகளைக் கொடுக்கின்ற மனிதர்களாக இந்த பூமியில் வலம்வர முடியும். ஆணவம் என்பது நம்மிடத்தில் தலைதூக்கும்போது கடவுள் நம்மிடத்தில் இருக்க மாட்டார். “ஆண்டவரிடமிருந்து விலகிச் செல்வதே மனிதருடைய இறுமாப்பின் தொடக்கம். அவர்களின் உள்ளம் தங்களைப் படைத்தவரை விட்டு அகன்று போகின்றது. பாவமே ஆணவத்தின் தொடக்கம். அதில் மூழ்கிப் போனவர்கள் அருவருப்பை உண்டாக்குகின்றனர்.” (சீராக்.10:12-13). எனவே நாம் நமது ஆணவத்தை விடுத்து ஆண்டவரைத் தேடும்போது கடவுள் நம் உள்ளத்தில் குடிகொள்வார் என்ற உணர்வோடு நம்மிடமிருக்கும் பாவநாட்டங்களைக் களைந்து, தன்னலம் துறந்து ஒருவருக்கொருவர் தொண்டுசெய்து அன்புறவுடன் வாழ்வோம்.